# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 19 திங்கட்கிழமை 02.05.2025 கதிர் 213









# யாழில் சைக்கிள் - சங்கு இன்று கொள்கை ஒப்பந்தம்

## 9 முக்கிய அம்சங்கள் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஒன்பது முக்கிய அம்சங்களை உள்ளடக்கித் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான கொள்கை ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது.

யாழ்ப்பாணம் நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் வைத்து இன்று பிற்பகல் 12.45 மணியளவில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கமும் கையொப்பமிட்டனர்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், ந.சிறீகாந்தா, பொ. ஐங்கரநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், ஈ.சரவணபவன், க.அருந்தவபாலன், க.நாவலன் ஆகியோரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், சுரேஷ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார், நாகலிங்கம் இரட்ணலிங்கம், பா.கஜதீபன், க.சர்வேஸ்வரா உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியப் பேரவை, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய தரப்புக்களிடையே தொடர்ச்சியாக நடைபெற்ற சந்திப்புக்களைத் தொடர்ந்து இன்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"சுதந்திர இலங்கைத் தீவில் கடந்த 77 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் தேசம் தனது அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் விதத்திலும் தன்னுடைய தனித்துவம், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தனது மரபுவழித் தாயகத்தில் ஒரு தனியான தேசம் என்ற அடிப்படையில் தனது பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது விவகாரங்களைத் தானே கையாளக்கூடிய விதத்திலும் தனது சுதந்திரத்தை நிலைநிறுத்தும் வகையிலும் பூரண பொறுப்பு வாய்ந்த ஒரு சுயாட்சி அரசியல் ஆட்சி முறையைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையது என்ற யதார்த்தத்தின் அடிப்படையிலும், இந்த இலக்கினை அடைவதற்கு தமிழ்த் தேசத்தினால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்திருக்கும் ஒற்றையாட்சி எனப்படும் அரசியல் ஆட்சி முறையின் எந்தவொரு ஏற்பாட்டின் கீழும் அறவே இடமில்லை

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு!

### ஒருவர் படுகாயம்



மட்டக்களப்பு, ஜூன் 2

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கன்னங்குடா கண்ணகியம்மன் ஆலய வீதியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

36 வயதுடைய நபரே 7➤

## இரத்மலானை - பலாலி விமான சேவை இரண்டு வருடங்களின் பின்னர் ஆரம்பம்




யாழ்ப்பாணம், ஜூன் 2

இரண்டு வருடங்களின் பின்னர் இரத்மலானை மற்றும் பலாலி விமான நிலையத்துக்கு இடையிலான சேவை இன்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது.

இதனடிப்படையில் இந்தச் சேவையை ஆரம்பிக்கும் முகமான தகுதிகாண் விமான சேவை டேவிட் பீரிஸ் விமான சேவை நிறுவனத்தால் இன்று 7➤

### தமிழகத்தில் இருந்து 37 வருடங்களின் பின்

## தாயகம் திரும்பிய வேளை கைதான முதியவர் இன்று பிணையில் வந்தார்



யாழ்ப்பாணம், ஜூன் 2

தமிழகத்தில் இருந்து 37 வருடங்களின் பின் தாயகம் திரும்பிய வேளை கைது செய்யப் பட்ட முதியவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

37 வருடங்களுக்கு முன்னர் 7➤

## மதுபோதையில் நபர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய 6 இராணுவத்தினர் கைது!

கொழும்பு, ஜூன் 2

கொழும்பு, புறக்கோட்டை மிதக்கும் சந்தைப் பகுதிக்கு அருகில் மதுபோதையில் நபர் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தியதாகக் கூறப்படும் ஆறு இராணுவச் சிப்பாய்கள் புறக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதானை இராணுவ முகாமில் கடமையாற்றும் 29 முதல் 40 வயதுக்குட்பட்ட ஆறு இராணுவச் சிப்பாய்களே கைது செய்யப்பட்டுள்ளனர். 7➤



# ஆறு வருடத்திற்கு பிறகு கூடிய NBMC

கொழும்பு, ஜூன் .02

ஆறு வருட இடைவெளிக்குப் பிறகு, இலங்கையின் தேசிய எல்லை முகாமைத்துவ குழு (NBMC) அதன் 9வது அமர்வுக்காக மே 30, 2025 அன்று பாதுகாப்பு அமைச்சில் கூடியது. இது வளர்ந்து வரும் உலகளாவிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு இயக்கவியலுக்கு மத்தியில் இலங்கையின் எல்லைப் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது. இந்தக் கூட்டம் பாதுகாப்புச் செயலாளர் எயார்வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தாடவின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது.



முதலில் டீேஆஊபாதுகாப்புச் செயலாளரின் தலைமையில் ஒருங்கிணைந்த எல்லை முகாமைத்துவ உத்தியின் (ஐடீஆளு) ஒரு அங்கமாக நிறுவப்பட்டது – இது பத்து வருடங்களுக்கு முன்பு சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (IOM) மற்றும் அவுஸ்திரேலியா மற்றும் கனடா அரசாங்கங்களின் ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்பட்டதாக்கும். இது, தேசிய எல்லைகள் வழியாக எழும் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதுடன், குறிப்பாக ஒழுங்கற்ற இடம்பெயர்வு தொடர்பில் அதிக கவனம் செலுத்துகிறது. அதன் ஆரம்பத்திலிருந்து, எட்டு NBMC அமர்வுகள் நடத்தப்பட்டு பின்னர் 2021 முதல் ஒரு இடைவெளிக்கு பின் இத்தடவை மீண்டும் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் ஐடீஆ மூலோபாயத்தின் கீழ் உருவாக்கப்பட்ட எல்லை ஆபத்து மதிப்பீடு நிலையம் (BRAC) மட்டுமே பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்பட்டு வந்தது.

உலக அளவில், குறிப்பாக பிராந்தியத்தில் புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலவரங்களில் மாற்றம் ஏற்பட்டு வரும் சூழலில், கட்டமைக்கப்பட்ட எல்லை முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பாதுகாப்பு அமைச்சு NBMC-I மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளியுறவு அமைச்சு, பொதுப் பாதுகாப்பு அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை, சுங்கத் திணைக்களம், கடற்படை, போலீஸ் திணைக்களம் மற்றும் கடலோர காவல் படை உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களின் சிரேஷ்ட பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இவ் அமர்வின் போது கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு, குறிப்பாக சுற்றுலாத்துறையை மேம்படுத்த மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க, உறுதியான தேசிய பாதுகாப்பின் வகிபாகத்தை வலியுறுத்தினார். எல்லைப் பாதுகாப்பு என்பது தேசிய பாதுகாப்பின் அடிப்படை தூண் என்று தெரிவித்த அவர் இத்துடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களின் பொறுப்புக்கூறலுடன்கூடிய தீவிர ஈடுபாட்டை வேண்டி நின்றார்.

கூட்டத்தின் போது, ஒழுங்கற்ற இடம்பெயர்வு, எல்லை தாண்டிய மனிதர்கள்கடத்தல், போதைப்பொருள் கடத்தல், தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் நடமாட்டம் மற்றும்சர்வதேசஎல்லைகள்வழியாக தப்பிச்செல்லும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் சட்டவிரோத நடவடிக்கைகள், போன்ற வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் குறித்து ஆராயப்பட்டன.

இந்த அச்சுறுத்தல்களுக்கு விரைவான மற்றும்ஒருங்கிணைந்த தீர்வுகளுக்கான அவசரத் தேவையை பாதுகாப்புச் செயலாளர் எடுத்துரைத்தத்துடன் எல்லைப் பாதுகாப்பு தொடர்பான பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகளுக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். மேலும் அவுஸ்திரேலியா மற்றும், கனடா அரசுகள் மற்றும் ஐழுஆ அமைப்பும் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவையும் அவர் பாராட்டினார். அத்துடன் எதிர்காலத்திலும் அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு தொடர்பாக நம்பிக்கை தெரிவித்தார்.

நீண்ட இடைவெளிக்குப் பின் NBMC-I மீள் ஆரம்பத்திற்கு பங்களித்த அமைச்சு ஊழியர்கள் மற்றும் பங்கேற்கும் அனைத்து அதிகாரிகளுக்கும் பாதுகாப்புச் செயலாளர் தனது நன்றியை தெரிவித்துள்ளார். இக் குழு அதன் அடிப்படை மூலோபாய நோக்கங்களுடன் இணைந்திருக்கும் அதே வேளையில் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களுக்கு ஏற்ப உருவாக்கவும் அவர் அறிவுரை வழங்கினார். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீடீ) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்திய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# அல்வாய் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல்

வடமராட்சி, ஜூன் .02

வடமராட்சியை கைப்பற்றும் நோக்கில் இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட'லிபரேசன் ஒபரேசன்' எனும் இராணுவ நடவடிக்கையின் போது 1987 மே 26 முதல் 31 வரை இடம்பெற்ற அல்வாய் படுகொலை நிகழ்வின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி - மாலைசந்தை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (01) காலை இடம்பெற்றுள்ளது.

'லிபரேசன் ஒபரேசன்' இராணுவ நடவடிக்கையின் போது ஆலயங்கள், பாடசாலைகளில் சென்று பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு இராணுவத்தினரால் உலங்குவானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

இதையடுத்து வடமராட்சி பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் ஆலய சூழலிலும் அடைக்கலமடைந்திருந்த நிலையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு பலர் காயமடைந்திருந்தனர்.



அத்துடன் வடமராட்சி பகுதி எங்கும் பரவலாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு, எறிகணைத் தாக்குதல், கையெறி குண்டுத் தாக்குதல்களில் சிக்கி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

மைக்கேல் விளையாட்டு கழகம், மைக்கேல் நேசக்கரம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நினைவேந்தல் நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். சுகிர்தன், தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது மைக்கேல் விளையாட்டுக்கழகத்தினரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துவிச்சக்கர வண்டி, உலருணவுப் பொருட்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 24 மணி நேர டிஜிட்டல் மருத்துவ சேவை அறிமுகம்




சவுதி அரேபியாவின்'ஏளைழுை 2030' திட்டத்தின் ஒரு பகுதியாகவும், சுகாதாரத் துறை மாற்றத் திட்டம் மற்றும் ஹஜ் பயண அனுபவ மேம்பாட்டு திட்டத்தின் கீழாகவும், சுகாதார அமைச்சகம் "சேஹா டிஜிட்டல் வைத்தியசாலை" மூலம் ஹஜ் பயணிகளுக்காக 24 மணி நேர டிஜிட்டல் மருத்துவ ஆலோசனை சேவைகளை தொடங்கியுள்ளது.

937 என்ற அழைப்பு மையம், "சிஹாட்டி" செயலி மற்றும் "ஓ" தளத்தின் மூலம் இந்த சேவைகள் வழங்கப்படுகின்றன. அரபு, ஆங்கிலம், பிரஞ்சு, துருக்கி, பாரசீக, உருது மற்றும் இந்தோனேசியா ஆகிய ஏழு மொழிகளில் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

பயணிகள் ஆடியோ, வீடியோ அல்லது உரை வடிவ ஆலோசனைகளைப் பெறலாம், மருத்துவ ஆவணங்கள் மற்றும் சோதனை முடிவுகளை பதிவேற்றலாம், தேவைப்பட்டால் மின்னணு மருத்துவ குறிப்புகளும் பெறலாம்.

"ளுநாயவல" செயலி மூலம் பயணிகள் தங்கள் எல்லை எண்ணைப் பயன்படுத்தி பதிவு செய்யலாம், இது முழுமையான டிஜிட்டல் சுகாதார அனுபவத்தை வழங்குகிறது. மக்கா, மதீனா மற்றும் ஹஜ் முகாம்கள் உள்ளிட 300க்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் தற்காலிக மருத்துவ நிலையங்களுடன் இணைந்து செயல்படும்

"ஊழளெரடவ"ட்ரள" சேவை (அரபு மற்றும் ஆங்கிலத்தில்) அவசர மருத்துவ பதில்கள் மற்றும் விரைவான தீர்மானங்களை எடுக்க உதவுகிறது. இந்த முன்முயற்சி,ஹஜ் 1446 காலப்பகுதியில் உலகம் முழுவதிலும் இருந்து வரும் பயணிகளுக்கு எளிமையான, விரைவான, தரமான சுகாதார சேவைகளை வழங்குவதை உறுதி செய்கிறது. (ஐ)



# மீண்டும் வேகமெடுக்கும் கொவிட் 19 : அவதானம் தேவை

கொழும்பு, ஜூன் .02

கொவிட் 19 தொற்று தொடர்பில் இரண்டு சுற்றுநிருபங்களை விரைவில் வெளியிடுமாறு சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, பொதுமக்கள் மற்றும் சுகாதாரத் தரப்பினரை இலக்காகக் கொண்டு குறித்த சுற்றுநிருபங்கள் வெளியிடப்படுமென சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் கொவிட் 19 தொற்றுக்குள்ளான பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் பரவிவரும் ஒமிக்ரோன் வைரஸின் இரண்டு உப திரிபுகள் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனினும் இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும், உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், கொவிட்-19 வைரஸ் தாக்கம் குறித்து கர்ப்பிணி தாய்மார்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சுகாதார தரப்பினர் எச்சரித்துள்ளனர் (ஐ)

# உள்ளூராட்சிகளின் பதவிக்காலம் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூன் .02

நாடு முழுவதும் மே 06ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 339 உள்ளூராட்சி மன்றங்களில் 161 சபைகளின் பதவிக்காலம் இன்று திங்கட்கிழமை (02) ஆரம்பமாகும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மீதமுள்ள 178 சபைகள் நிர்வாகக் குழப்பத்தில் உள்ளன என்றும் நீதிமன்ற வழக்கு காரணமாக கல்முனை நகர சபை மற்றும் கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட எல்பிட்டிய பிரதேச சபை ஆகிய இரண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கு மே 06ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

எனினும், 28 நகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இருந்தன, வேட்பாளர்களின் எண்ணிக்கை 75,589 ஆகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பில், வெற்றியாளர்கள் 50மூ அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களைப் பெற்ற 161 உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.



மீதமுள்ள 178 உள்ளூராட்சி அமைப்புகள் தொங்க விடப்பட்டுள்ளன, ஆளும் ே மற்றும் ளுதுஉ பெரும்பான்மையைப் பெற பாடுபடுகின்றன.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பெப்ரவரி 17 அன்று வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பின் விதிகளின் கீழ், உள்ளாட்சி அமைப்புகளின் புதிய பதவிக்காலம் ஜூன் 2, 2025 அன்று தொடங்க திட்டமிடப்பட்டது.

இந்த 161 உள்ளூராட்சி அமைப்புகள் இப்போது முழுமையாக உருவாக்கப்பட்டு நிர்வாகக் கடமைகளைத் தொடங்கத் தயாராக இருப்பதாக தேர்தல் ஆணையர் ஜெனரல் சமன் ரத்நாயக்க ஞாயிற்றுக்கிழமை (01) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையில், மீதமுள்ள 178 உள்ளூராட்சி அமைப்புகள் அவற்றின் கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வரை செயல்படாமல் இருக்கும்.

2025 உள்ளூராட்சித் தேர்தலில் ே ஒரு மகத்தான வெற்றியைப் பெற்றது, மொத்தம் 4,503,930 வாக்குகளுடன் 3,927 உள்ளூராட்சி இடங்களை வென்றது. ேமொத்தம் 266 உள்ளூராட்சி நிறுவனங்களை வென்றது.

# அண்ணா பல்கலை வழக்கு ஞானசேகரனுக்கு 30 ஆண்டுக்கு குறையாத ஆயுள் தண்டனை

சென்னை அண்ணா பல்கலை மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் கைதான தி.மு.க., அனுதாபி ஞானசேகரனுக்கு 30 ஆண்டுக்கு குறையாத ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. சென்னை அண்ணா பல்கலை மாணவி, அதே வளாகத்தில், கடந்தாண்டு டிச., 23ம் தேதி, சக மாணவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த நபர், இருவரையும் மிரட்டி மாணவரை அடித்து விரட்டி விட்டு, மாணவியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இந்த சம்பவம், நாடு முழுதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



மாணவி அளித்த புகாரை அடுத்து, கோட்டூர்புரம் மகளிர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். அடையாறு பகுதியில் சாலையோர உணவகம் நடத்தி வந்த, கோட்டூர்புரத்தைச் சேர்ந்த தி.மு.க., அனுதாபி ஞானசேகரன், 37 என்பவரை, கடந்தாண்டு டிச., 25ல் கைது செய்தனர்.

உயர் நீதிமன்ற உத்தரவின்படி, வழக்கை விசாரித்த சிறப்பு புலனாய்வு குழு, சைதாப்பேட்டை நீதிமன்றத்தில், ஞானசேகரனுக்கு எதிராக, நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை மற்றும் 70க்கும் மேற்பட்ட சான்று ஆவணங்களை, கடந்த பிப்ரவரியில் தாக்கல் செய்தது.

பின், இந்த வழக்கு விசாரணை, சென்னை அல்லிகுளத்தில் உள்ள மகளிர் சிறப்பு நீதிமன்றத்துக்கு, கடந்த மார்ச் 7ல் மாற்றப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்கள், கடந்த 23ல் நிறைவு பெற்றதை அடுத்து, கடந்த மே 28ம் தேதி ஞானசேகரன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இந்த வழக்கில் இன்று (ஜூன் 02) தண்டனை விபரங்களை நீதிமன்றம் அறிவித்தது.

தி.மு.க., அனுதாபி ஞானசேகரனுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. ஞானசேகரனுக்கு 30 ஆண்டுகளுக்கு குறையாத ஆயுள் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது. மேலும் ரூ.90 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

"குற்றவாளி ஞானசேகரனுக்கு எந்த சலுகையும் வழங்க கூடாது" என நீதிபதி கண்டிப்புடன் தெரிவித்துள்ளார். மேலும், இத்தனை நாட்கள் சிறையில் இருந்த காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்றும் நீதிபதி கூறி யுள்ளார். (ஐ)



## 'தி.மு.க., பின்னால் ஒளியும் கமல்'

கோவை தெற்கு தொகுதியில், 'நலம்' இலவச மருத்துவ முகாமை, பா.ஜ., - எம்.எல்.ஏ., வானதி துவங்கி வைத்தார். முருக பக்தர்கள் மாநாடு தொடர்பாக வீடு, வீடாக நோட்டீஸ் வழங்கினார். எம்.பி., பதவி மூலம் தி.மு.க.,வின் பின்னால் ஒளிந்து கொள்ளும் கமல் வானதி விமர்சனம்

மதுரையில், ஜூன் 22ல் முருக பக்தர்கள் மாநாடு நடக்கிறது. இது முருக பக்தர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் மாநாடாக இருக்கும். நடிகர் கமல், மக்கள் ஆதரவை பெற்று வெற்றி பெற முடியாமல், தி.மு.க., பின்னால் ஒளிந்து, ராஜ்யசபா எம்.பி., பதவியை பெற்றுள்ளார்.

மதுரையில் முதல்வர் பார்வையிட சென்றபோது, அங்கு துணிகளை போட்டு மூடி வைத்திருந்த சம்பவம் தவறானது. கோவையிலும் பல இடங்களில், குப்பைகளை இதுபோன்றே மறைத்து வைத்திருக்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## கைதான சட்டக்கல்லூரி மாணவிக்கு பல எம்.பி.,க்கள் ஆதரவு குரல்

மேற்கு வங்க பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ள சட்டக்கல்லூரி மாணவிக்கு, நெதர்லாந்து எம்.பி., கீர்த் வைல்டர்ஸ், ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் உட்பட பலர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.



மஹாராஷ்டிராவின் புனேவைச் சேர்ந்தவர் ஷர்மிஸ்தா பனோலி, 22. அங்குள்ள சட்டக்கல்லூரியில் நான்காம் ஆண்டு சட்டம் படித்து வருகிறார். இவர், பாகிஸ்தானுக்கு எதிரான 'ஆப்பரேஷன் சிந்துார்' குறித்து தன் சமூக வலைதள பக்கத்தில் சமீபத்தில் வீடியோ வெளியிட்டார்.

அதில், ஆப்பரேஷன் சிந்துார் பற்றி வாய் திறக்காத பாலிவுட் நடிகர், நடிகையரையும், முஸ்லிம் மதத்தையும் கடுமையாக விமர்சித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, அவருக்கு கொலை மிரட்டல் அழைப்புகள் வரத் துவங்கின. மேற்கு வங்கத்தின் கொல்கட்டா பொலிஸில் அளித்த புகாரின்படி, ஷர்மிஸ்தா மீது வழக்குப்பதிவு செய்தது.

இதைத்தொடர்ந்து, தான் வெளியிட்ட வீடியோவை நீக்கிய அவர், 'நான் யாரையும் வேண்டுமென்றே காயப்படுத்த நினைக்கவில்லை. இனிமேல், என் கருத்துகளில் எச்சரிக்கையாக இருப்பேன்' என அறிக்கை வெளியிட்டார். எனினும், ஹரியானா மாநிலம் குருகிராமில் இருந்த ஷர்மிஸ்தாவை, கொல்கட்டா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இந்நிலையில், ஷர்மிஸ்தாவுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடான நெதர்லாந்தின் 'பார்ட்டி பார் ப்ரீடம்' என்ற கட்சியின் எம்.பி., கிரீத் வைல்டர்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட பதிவு:

பாகிஸ்தான் பற்றிய உண்மையை தெரிவிக்கும் ஷர்மிஸ்தாவை தண்டிக்கக்கூடாது. இந்த கைது நடவடிக்கை, பேச்சு சுதந்திரத்திற்கு எதிரான செயல். எனவே, கைது செய்யப்பட்ட ஷர்மிஸ்தாவை உடனே விடுதலை செய்ய வேண்டும். கைதான ஷர்மிஸ்தாவை விடுவிக்க, பிரதமர் மோடி உதவ வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாணும் ஷர்மிஸ்தாவுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் கூறுகையில், 'தான் தெரிவித்த கருத்துக்கு ஷர்மிஸ்தா மன்னிப்பு கேட்ட பின்பும், அவரை கொல்கட்டா பொலிஸார் கைது செய்தது கண்டிக்கத்தக்கது.

மதச்சார்பின்மை என்பது சிலருக்கு கேடயமாகவும், மற்றவர்களுக்கு வாளாகவும் இருக்காது. அது இருவழிப் பாதையாக இருக்க வேண்டும். மேற்கு வங்க பொலி ஸாரின் செயல்பாட்டை, நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது. எனவே, அனைவருக்கும் நியாயமாகச் செயல்படுங்கள்' என, பதிவிட்டுள்ளார்.

ஷர்மிஸ்தா கைது பற்றி காங்கிரஸ் எம்.பி., கார்த்தி சமூக வலைதளத்தில் கூறுகையில், 'இதுபோன்ற சமூக ஊடகப் பதிவுகளால், சட்டம் - ஒழுங்கு பிரச்னைக்கு வழிவகுத்தது என்பது தெளிவாக நிரூபிக்கப்படாவிட்டால், போலீசாரின் அதிகாரங்களை மாநில அரசு தவறாகப் பயன்படுத்துவதாகவே கருத முடியும்' என, குறிப்பிட்டுள்ளார் (ஐ)

## ரசிகர்களை பார்த்ததும் வாயில் வார்த்தைகள் வரவில்லை பிறந்த நாளில் இளையராஜா நெகிழ்ச்சி!

சென்னையில் நிருபர்கள் சந்திப்பில் இளையராஜா கூறியதாவது: எனக்கு பிறந்த நாள் கூறிய முக்கிய பிரமுகர்களுக்கும், என்னை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த அனைத்து ரசிகர்களுக்கும், சமூகவலைதளங்களில் வாழ்த்து கூறிக் கொண்டே இருக்கும் ரசிகர்களுக்கும் நன்றி. வாழ்க் வளமுடன் நன்றி. பிறந்த நாள் வாழ்த்து கூற பல இடங்களில் இருந்து வெகு துாரத்தில் இருந்து சிரமப்பட்டு என்னை பார்க்க ரசிகர்கள் வந்துள்ளனர். ரசிகர்களை பார்த்ததும் வாயடைத்து போகிறேன் வாயில் வார்த்தைகள் வரவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



இளையராஜாவுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து, சமூகவலைதளத்தில் முதல்வர் ஸ்டாலின் பத ிவிட்டுள்ளார். அந்த பதிவில் முதல்வர் ஸ்டாலின் கூறியிருப்பதாவது:

நாட்டுப்புற இசை, மெல்லிசை, துள்ளலிசை, மரபிசை, தமிழிசை, மேற்கத்திய இசை என அனைத்திலும் கரைகண்டு தமிழர்களின் பெருமைமிகு அடையாளமாகத் திகழும் இசைஞானி இளைய ராஜாவுக்கு என் நெஞ்சம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த துகள்!

தங்களின் சிம்பொனி இசை தமிழகத்தில் ஒலிக்க உள்ள ஆகஸ்ட் 2ம் நாளுக்காகக் கோடிக்கணக்கான ரசிகர்க ளில் ஒருவனாக நானும் காத்திருக்கிறேன். நேற்றும், இன்றும், என்றும் தங்கள் இசை ராஜாங்கத்தின் ஆட்சி தான். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)

## இளைஞர்கள் கல்வியில் அரசியல் கூடாது: கவர்னர் ரவி

"சிந்துார் ஆப்பரேஷன்' வெற்றியை சிலரால் ஏற்றுக கொள்ள முடியாமல், கேள்வி எழுப்புகின்றனர்," என, தமிழக கவர்னர் ரவி தெரிவித்தார்.



'சென்னை சிட்டிசன்ஸ் போரம்' அமைப்பின் சார்பில், சிந்துார் ஆப்பரேஷன் வெற்றி விழா, தி.நகரில் உள்ள கிருஷ்ணகான சபாவில் நேற்று நடந்தது.

ஆப்பரேஷன் சிந்துார் வெற்றியை, உலக நாடுகளே ஏற்றுக் கொண்டன. இந்நிலையில், இங்குள்ள சில எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

இந்தியா வளர்வதை சிலர் விரும்பவில்லை. அவர்கள் மனநிலை மாற வேண்டும். இங்கு பல மொழிகள், கலாசாரங்கள் இருந்தாலும், இந்தியா என்பது ஒரு நாடு. அதுதான் பாரதம்.

போர் என்றால் சில இழப்புகள் ஏற்படும். ஆனால், நாட்டை காப்பதே நம் கடமை. இந்த எண்ணம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும். முப்படைகளின் தியாகம் மற்றும் அர்ப்பணிப்பை, நாம் போற்ற வேண்டும்.

தேசிய கல்விக் கொள்கை மிக முக்கியமானது. சிலர் அதை வைத்து அரசியல் செய்கின்றனர். நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் வசம்தான் உள்ளது. அவர்கள் கற்கும் கல்வியில், அரசியல் செய்வது நாகரிகமற்றது.

தமிழகத்தில், ஆண்டுக்கு 7,000 பேர் பிஎச்.டி., பட்டம் பெறுகின்றனர். ஆனால், அவர்கள் அனைவரும் தகுந்த திறனுடன் இருப்பதில்லை.

அவர்களுக்கு முறையான வழிகாட்டுதல் மற்றும் கல்வியறிவு வழங்கப்பட வேண்டும். ஐ.ஐ.டி.,யில் படிக்கும் மாணவர்கள், திறன் மிகுந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு உரிய கல்வி, வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. இந்தியா யாருக்கும், எந்த நாட்டுக்கும் எதிரானது அல்ல. அதேசமயம், பயங்கரவாதிகள் வேருடன் அழிக்கப்படுவர்.

முன்பிருந்த இந்தியா இப்போது இல்லை. வளர்ந்து வரும் இந்தியர் புதிய இந்தியாவாக மாறி உள்ளது. இவ்வாறு அவர் பேசினர். (ஐ)

# பாறையில் படிந்த ஆதித்தடங்கள்!

இளம்பிறை

மனிதகுல வரலாற்றின் நிகழ்வுகளும் கண்டுபிடிப்புகளும் அடிமைத்தனங்களும் போராட்டங்களும தொடர்கதைகளாக தொடர்ந்துவரும் எல்லையற்றவை. அன்றாட உலகில் நிகழ்பவை எல்லாமே வரலாறாகிவிடுவதில்லை. பிறந்த ஒவ்வொருவருமே போற்றப்படுவதுமில்லை.

இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ள தடயங்களிலும் தகவல்களிலும் வீரர்களாகவும் தீரர்களாகவும் வெற்றியாளர்களாகவும் ஒட்டுமொத்தமாக ஆண்களே இருந்து வந்திருப்பதையே படித்து வருகிறோம். ஏதோ பேருக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக பெண்களைப் பற்றிய அரிதான குறைவான பதிவுகள். இந்த நிலை உண்மைதானா அல்லது பெண்களின் பெருமித வரலாற்றுப் பங்களிப்பு வரலாற்றை எழுதுபவர்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டதா என்பது பற்றிய ஆய்வுகள் தேவையாக இருக்கின்றன.

நம்மில் பெரும்பான்மையானவர்களுக்கு ஒவ்வொரு பொழுதுமே வெறும்பொழுதாகவே விடைபெற்றுவிடுகின்றன. ஒருவர்தன் ஆயுளில் நிகழும் அத்தனையும் மனதில் பதிந்து நினைவில் நின்று விடுவதில்லை.

ஆனாலும், இவற்றிற்கு மாறாக எங்கோ எப்போதோ கேட்ட ஒரு சொல், ஒரு சொலவடை, பால்யத்தில் நிகழந்த ஒரு சம்பவம், ஒரே ஒருமுறைப் பார்த்த ஒரு மனிதர், பாசி படர்ந்த படித்துறை, வாய்க்கால் தண்ணீரில் மிதந்து வந்த பனம்பழம், தூண்டிலில் சிக்கிய விரால்மீன் என நினைவிலிருந்து உயிருள்ளவரை அழியாத சித்திரங்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்நிலைக்கேற்ப பற்பல. அவ்வாறு மழையாலும் கரைக்க முடியாத பாறைமேல் படிந்த தடங்களாக நினைவில் என்றும் நிலைப்பவை தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றன.

'நவீன தமிழ்நாடகங்களில் பெண் பாத்திரங்கள்' என்ற எனது முனைவர் பட்ட ஆய்விற்காக நான் கடந்த மூன்றாண்டுகளாக நிறைய புத்தகங்களை தேடித்தேடி வாசித்தேன். அவற்றில் வ.கீதாவின் 'காலக்கனவு' என்ற பெண்ணிய வரலாற்று ஆவண நாடக நூலும் ஒன்று. காலக்கனவின் வரலாற்று நாயகிகள் அனைவரும் சென்ற இருபதாம் நூற்றாண்டு வாழ்ந்த என்பதைவிட வாழ்வதற்காகவும் சமூக நீதிக்காகவும் போராடி சாதனை படைத்த பெண் மக்களாவார்.

பத்து ரூபாய்க்கும் ஒரு பழைய புடவைக்கும் தன் தாயாரால் சிறுவயதில் விற்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார பெரும்போராளியாகவே இறுதிவரை வாழ்வைச் சந்தித்திருக்கிறார். தேவதாசி குலத்தில் பிறந்தோர் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்கிற விதியை மீறி காதல் மணம்புரிந்து அதற்காக பிறர் போட்ட பொய் கொலை வழக்குகளை எதிர்கொண்டு வெற்றிப் பெற்றிருக்கிறார் என்பது சிலிர்க்க வைக்கும் உண்மையாக. எழுச்சிகொள்ளச் செய்கிறது. தாசிகள் முறையை எதிர்க்கிறார் என்பதற்காக அவர் அமர்ந்திருந்த மேடையிலேயே அவரது கூந்தலை அறுத்துக் கேவலப்படுத்தியும்கூட தனது சமூகப் போராட்டத்தை அவர் நிறுத்திக் கொள்ளாது தொடர்ந்து நின்றிருக்கிறார். இதைவிட வரலாற்றில் பெரிதாக வேறென்ன வீரம் இருந்திருக்க முடியும்?

வாளெடுத்து போர்புரிவது மட்டுமல்ல வீரம்,





அவமானங்களைப் பொறுத்து எதிர்கொள்வதே பெரும் வீரம் என்பதற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் வாழ்க்கை வரலாறே சான்றாக உள்ளது.

இதுவரையிலும் யாராலும் எட்டிப்பிடிக்க முடியாத, ஈடாக முடியாத கம்பீரமான குரலுக்குச் சொந்தமான கே.பி.சுந்தராம்பாள் வாழ்வும் கலைக்கான போராட்டமும் சாதாரணமானதல்ல பிரசித்தமான நடிகர் கிட்டப்பாவை காதல் மணம் புரிந்த அவருடைய வாழ்விலும் அடிக்கடி புயல் வீசியிருக்கிறது. சுந்தராம்பாள் தன் கணவர் கிட்டப்பாவிற்கு ஏதோ மன வருத்தத்தில் எழுதிய தேதி இல்லாத கடிதம் ஒன்றும் 'காலக்கனவு' நாடக நூலில் இடம் பெற்றிருக்கிறது. அந்தக் கடிதம்

"தேவரீர் அவர்கள் சமூகத்திற்கு எழுதியது, தாங்கள் அறிந்த கிண்டல் வார்த்தைகளை எனக்கு எழுத வேண்டாம். 'கிருஷ்ணலீலா' பார்த்ததில்லையே என்று பார்க்கப் போனேன். அதைப்பற்றி வித்தியாசம் என்றால் இருக்கட்டும் எத்தனையோ வித்தியாசத்தில் இது ஒன்று என்னைப் பற்றிய கவலையே தங்களுக்கு வேண்டாம். பதில் போட இஷ்டமிருந்தால் எழுதவும். இதுதான் கடைசி லெட்டர். இதுதான் கடைசி, இதுதான் கடைசி.

இப்படிக்கு

சுந்தரி"

இப்படி முடிகிற கடிதம் இந்தக்கடிதம். சொல்லும் செய்தி ஒன்றிரண்டே என்றாலும் சொல்லாத செய்திகள் நெஞ்சைக் கனக்க வைக்கின்றன. சற்றே விடுதலையும் விஞ்ஞான வளர்ச்சியும் சரிநிகர் புரிதலும் ஏற்படத் தொடங்கியிருக்கும் இக்காலப் பெண்களே குடும்ப வாழ்வில் பல



குழப்பங்களுக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாக வேண்டிய நிலை இருக்கும்போது கலைப்பசிக்காக தன் வாழ்வையே அர்ப்பணிப்பு செய்து கொண்ட சென்ற நூற்றாண்டின் பெண்கள் எவ்வளவு ஏச்சுப்பேச்சுக்கள் இடர்மொழிகள் இன்னல்களை சந்திருத்திருப்பார்கள் என எண்ணிப் பார்க்கவே சங்கடமாக இருக்கிறது.

பொதுவுடமை சித்தாந்தத்தில் ஈடுபாடுகொண்ட மணலூர் மணியம்மை என்னை வெகுவாக பிரமிக்க வைத்த சென்ற நூற்றாண்டுப் போராளிப் பெண்ணாக ஒளிர்கிறார். பால்ய விதவையான மணியம்மா சிலம்பம் பயின்று, சைக்கிள் ஓட்டக் கற்று, தன் முடியை 'கிராப்' வெட்டிக்கொண்டதோடு நில்லாமல், வேட்டி, அரைக்கை வைத்த கதர் சட்டை, சிவப்புத் துண்டோடு வலம் வந்திருக்கிறார் மக்களுக்காக. மணியம்மையின் வரலாறு அவ்வளவு ஊக்கம் தரும் என்பதால் அவர் கதையை யாராவது திரைப்படம் எடுத்தால் சிறப்பாக இருக்குமே என பலமுறை நினைத்திருக்கிறேன். கடைசியாக ஒரு பண்ணையாரின் வளர்ப்பு மான் குத்தி இறந்து போனதாக முடித்து வைக்கப்பட்ட மணியம்மையின் வாழ்வு இன்றைய இளம் தலைமுறை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியதாகும்.



# பாலங்கள் வெடித்து ரயில் கவிழ்ந்தது


கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் – ரஷ்யா இடையேயான போர் மூன்று ஆண்டுகளை கடந்துள்ளது.

ரஷ்யாவுக்குள் புகுந்து ட்ரோன் தாக்குதல் 40 விமானங்களை தகர்த்தது உக்ரைன்

இந்நிலையில், உக்ரைன் எல்லையை ஒட்டியுள்ள ரஷ்யாவின் பிரயான்ஸ்க் பகுதியில் பாலம் ஒன்று வெடித்து சிதறி, கீழே சென்று கொண்டிருந்த பயணியர் ரயில் மீது விழுந்தது.

இதில், ஏழு பேர் உயிரிழந்தனர் 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதற்கு சில நிமிடங்களில், உக்ரைன் எல்லையை ஒட்டியுள்ள குர்ஸ்க் பகுதியில் ரயில் பாலம் தகர்க்கப்பட்டதில், சரக்கு ரயில் ஒன்று தடம் புரண்டது (ஐ)

# இனியும் வெளிநாடுகளிடம் பிச்சை எடுக்க முடியாது: பாக்., பிரதமர்



பாகிஸ்தான் இனியும் பிச்சை பாத்திரத்துடன் சுற்ற முடியாது. இதனை நட்பு நாடுகள் கூட ஏற்காது என அந்நாட்டு பிரதமர் ஷெபாஷ் ஷெரீப் கூறியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. சீனா, சவுதி அரேபியா உள்ளிட்ட நட்பு நாடுகள் மட்டும் அல்லாமல் உலக வங்கி மற்றும் ஐஎம்எப் போன்ற சர்வதேச நிதியத்திடம் உதவி செய்யும்படி கெஞ்சியது. இதனையடுத்து அங்கிருந்து நிதியுதவி கிடைத்தன.

இந்நிலையில், பாகிஸ்தான் குயிட்டா நகரில் ராணுவ வீரர்கள் மத்தியில் ஷெபாஸ் ஷெரீப் பேசியதாவது: பாகிஸ்தானின் அனைத்து கால கூட்டாளியாக சீனா உள்ளது. சவுதி அரேபியா நம்பகமான நட்பு நாடாக உள்ளது. துருக்கி, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்சுக்கும் இது பொருந்தும்.

அவர்களுடன் வர்த்தகம், வணிகம், வணிகம், புதுமை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, கல்வி மற்றும் சுகாதாரம், முதலீடுகள் மற்றும் லாபகரமான முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் இப்போது எதிர்பார்க்கிறார்கள். பிச்சை பாத்திரத்துடன் அங்கு வருவதை அவர்கள் இனியும் விரும்பவில்லை.

பொருளாதார சவால்களை எதிர்கொள்ள இயற்கை மற்றும் மனித வளத்தை பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த பொருளாதார நெருக்கடியை சுமக்கும் கடைசி நபராக, ராணுவ தளபதி ஆசிம் முனீருடன் இணைந்து நான் இருப்பேன். இவ்வாறு அவர் பேசினார்.

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் இந்தியாவின் தாக்குதலால் பலத்த சேதத்தை பாகிஸ்தான் சந்தித்து உள்ளது. இச்சூழ்நிலையில், ஷெபாஷ் ஷெரீப் பேசி உள்ளார். (ஐ)





# அணு ஒப்பந்தம் ஈரானுக்கு அமெரிக்கா நெருக்கடி

அணு சக்தி ஒப்பந்த முன்மொழிவுகளை அமெரிக்க அரசு நிர்வாகம், ஈரானுக்கு அனுப்பி வைத்துள்ளது உடனடியாக கையெழுத்திட வருமாறு நெருக்கடி கொடுத்துள்ளது.

மேற்காசிய நாடான ஈரான் உடன் அணு சக்தி ஒப்பந்தத்தில் இருந்து, 2018ல் அமெரிக்கா விலகியது. தற்போது அமெரிக்க அதிபராக உள்ள டொனால்டு டிரம்ப், அப்போதும் அதிபராக இருந்தார்.

இந்நிலையில், ஈரான், அதிகளவில் அணு ஆயுதங்களை தயாரித்தது. மேலும், அந்த நாட்டிடம், அணு ஆயுதம் தயாரிப்பதற்கான யுரேனியம் அதிகளவில் உள்ளது.


அணுஆயுத ஒப்பந்த முன்மொழிவுகளை ஈரானுக்கு அனுப்பியது அமெரிக்கா இது பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதால், ஈரானுடன் அணு சக்தி ஒப்பந்தம் செய்ய டிரம்ப் தீவிரம் காட்டி வருகிறார்.

அணு ஆயுதங்களை தயாரிக்கக் கூடாது. அந்த நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என்பது, அமெரிக்காவின் புதிய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும்.

இது தொடர்பாக ஈரானுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறார் டிரம்ப்.

இந்த நிலையில், அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்திற்கான முன்மொழிவை அமெரிக்கா அனுப்பியுள்ளது உடனடியாக கையெழுத்திடும்படி நெருக்கடி கொடுத்துள்ளது. (ஐ)

# கால்பந்து போட்டி வெற்றி கொண்டாட்டத்தில் வன்முறை: பிரான்சில் இருவர் பலி 500 பேர் கைது



பிரான்சில் நடந்த சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் வெற்றி கொண்டாட்டங்களின் போது, ஏற்பட்ட மோதலில் , இருவர் பலியானார்கள், மேலும் 192 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக 500க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

பிரான்ஸ் பாரீஸ் நகரில் சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதி போட்டியில் பாரீஸ் செயிண்ட் ஜெர்மைன் அணியும், இத்தாலியின் இன்டர் மிலன் அணியும் மோதின. இதில் முதல்முறையாக பாரீஸ் செயிண்ட் ஜெர்மைன் அணி வெற்றிபெற்று சாம்பியன் ஆனது. நேற்று இரவு முழுவதும் வெற்றிக்கொண்டாட்டங்கள் நடைபெற்றது. வன்முறை வெடித்தன. ரசிகர்களுக்கும் போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் இருவர் கொல்லப்பட்டனர். 192 பேர் காயமடைந்தனர்.

வன்முறையால் நூற்றுக்கணக்கான தீ விபத்துகள் ஏற்பட்டது, இதில் 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டன. பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சுமார் 22 பேரும், 7 தீயணைப்பு வீரர்களும் காயமடைந்தனர். சாம்ப்ஸ் எலிசீஸில், பஸ் நிறுத்துமிடங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. போலீசார் மீது கற்களை வீசினர், ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள், தடைகளை தாண்டி, குதித்ததால், அவர்கள் மீது கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் அடித்து போலீசார் முயற்சித்தனர். இந்த வன்முறையில், இதுவரை 559 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், இதன் விளைவாக 320 பேர் போலீஸ் காவலில் வைக்கப்பட்டனர். இவ்வாறு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பதுடன் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்ட அரசு ஒன்றினை, தமிழ்த் தேசத்தின் மரபுவழித் தாயகத்தில், இலங்கைத் தீவு என்ற யாதார்த்த ரீதியான வரையறைக்குள் ஏற்படுத்துவதற்கு, ஒற்றுமையாகவும் உறுதியாகவும் பாடுபட நாம் தீர்மானித்துள்ளோம் என்பதையும் பிரகடனப்படுத்துகின்றோம்.

இலங்கைத் தீவில் இனப்பிரச்சினைக்கு நிலையானதும் நீதியானதுமான அரசியல் தீர்வு என்பது ஒரு புதிய அரசியல் சாசனத்தை திட்டவட்டமானதும் தெளிவானதுமான முறையில் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஏதுவாக, தமிழ்த் தேசத்தின் அரசியல் ஒற்றுமையை தமிழ்த் தேசியச் சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி ஏற்படுத்தப்படுகின்றது.

1. தமிழ் மக்களின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழ்த் தேசத்தின் இறைமையின் பாற்பட்டும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மரபுவழித் தாயகத்தில், ஒரு பூரணமான சம்ஷ்டி ஆட்சி முறை, அரசியல் சாசன ரீதியாக ஏற்படுத்தப்படுவதே தமிழ்த் தேசத்தின் இறைமையை ஏற்பதாகவும் தியாகம் செறிந்ததுமான நீண்ட விடுதலைப் போராட்டத்தின் அர்த்தமுள்ள அங்கீகாரமாகவும் இருக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி நிற்கின்றோம். மேலும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எமது முஸ்லிம் சகோதரர்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் நிலைநிறுத்தும் விதத்தில் அரசியல் சாசன ரீதியானவையும், வலுவானவையுமான அரசியல் நிர்வாக ஏற்பாடுகள், முஸ்லிம் சமூகத்தின் சம்மதத்துடனும் இணக்கப்பாட்டுடனும் ஏற்படுத்தப்பட வேண்டும்என்பதையும்நாங்கள்வலியுறுத்துகின்றோம்.

2. அரசியல் யாப்புக்கான 13 ஆவது திருத்தம் என்பது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான முழுமையானதோ, இறுதியானதோ தீர்வு அல்ல என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

3. கடந்த 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசின் அரசியல் நிர்ணய சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசன வரைபு என்பது, ஒற்றையாட்சிக்கு உட்பட்டது என்ற காரணத்தால் தமிழ்த் தேசத்தின் சுயாட்சிக்கு இடமளிக்கப்படவில்லை என்ற அடிப்படையில் அதனை நாங்கள் ஏற்கனவே நிராகரித்துள்ளோம் என்பதனை இரு தரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

4. போரின் போதும் அதற்குப் பின்னும் இழைக்கப்பட்ட மற்றும் இழைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இனப்படுகொலை, யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில், உள்ளகப் பொறிமுறைகளை முழுமையாக நிராகரித்துச் சர்வதேசக் குற்றவியல் விசாரணை ஒன்று அவசியமானது என்பதனை இரு தரப்பினரும் வெளிப்படுத்துகின்றோம்.

5. இந்த இலட்சியப் பயணத்தில் தமிழ்த் தேசத்தின் நலனை விரும்பும் சகல தமிழ்த் தேசிய சக்திகளும் நேர்மையாகவும், விரைவாகவும் இணைத்துக் கொள்ளப்படுவதற்குச் சாத்தியமான சகல முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

6. இந்த அடிப்படையில் பிரதிநிதித்துவ ஆட்சி முறை ஒன்றின் கீழ் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும், தமிழ்த் தேசியம் சார்ந்து நேர்மையாக செயற்படும் சக்திகள் ஒன்றிணைந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும், அதே நேரத்தில் இலங்கைக்கு வெளியே வாழ்ந்துகொண்டிருக்கும் புலம்பெயர் ஈழத் தமிழர்கள் மற்றும் பரந்த தமிழர் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரதும் ஒருமித்த ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் நாங்கள் விரும்புகின்றோம். இந்த அடிப்படையில் இந்த முயற்சிகளுக்கு எமது மக்கள் அனைவரினதும் ஆதரவையம் ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் நாங்கள் நாடி நிற்கின்றோம்.

7. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வலியுறுத்துவதிலும் அரசியல் சாசன ரீதியாக அவற்றை நிலைநாட்டிக் கொள்வதிலும் தமிழ் மக்கள் நேர்மையாகவும் உறுதியாகவும் தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளனர். தமிழ் மக்களின் முழுமையான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக எதிர்காலத்தில் நேர்மையுடனும் கொள்கை உறுதியுடனும் தமிழர் தேசத்தின் அரசியல் செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்காக ஏற்கனவே பல்வேறு தமிழ்த் தேசியக் கட்சிகளும் வெகுசன அமைப்புகளும் ஒருங்கிணைந்து, மக்களின் பங்கேற்புடன் தயாரித்து 2016 ம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொள்ள முடியும் என நாம் கருதுகின்றோம்.

8. இந்தக் குறிக்கோளை ஜனநாயக ரீதியான செயற்பாடுகளாலும், மக்கள் எழுச்சியினாலுமே சாதிக்க முடியும் என்பதை நாங்கள் வலியுறுத்தி, ஒரு பரந்த ஜனநாயக அரசியல் கட்டமைப்பாகவும், இந்த இலக்கினை முன்வைத்து சகல தமிழ்த் தேசியச் சக்திகளையும் ஒன்றிணைத்துச் சாத்தியமான விதத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும், அதை முன்னெடுத்துச் செல்வதற்கும் எமது மக்களின் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

9. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இரண்டு தரப்பினரும் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் விடுதலை கருதி ஓரணியாகச் செயற்படுவோம் என்பதனையும் வெளிப்படுத்துகின்றோம்." - என்றுள்ளது.

## இரத்மலானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுக்கப்பட்டது. கடந்த 2023 ஆம் ஆண்டுடன் இடைநிறுத்தபட்ட விமான சேவையானது மீண்டும் டேவிட் பீரிஸ் விமான சேவை நிறுவனத்தின் மூலம் இலங்கை விமான சேவைகள் அதிகார சபைக்கு விண்ணப்பிக்கபட்ட விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் முகமாகத் தகுதிகாண் சேவை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கப்டன் தமிந்த றம்புக்வெல பிரதி தலைமை அதிபதி இலங்கை விமான சேவைகள் அதிகார சபை பின்வருமாறு தனது கருத்தைப் பதிவு செய்தார்.

குறிப்பாக இரண்டு வருடங்களின் பின்னர் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படுகின்றது. நமது நோக்கம் இலங்கைக்கு இடையில் உள்நாட்டு விமான சேவைகளை வளர்ப்பதாகும் .

அதன் அடிப்படையில் டேவிட் பிரிஸ் குடும்பத்தினராக முன்வைக்கப்பட்ட கோரிக்கை அமைவாக இன்று தகுதிதான் சேவை பரிசோதிக்கப்பட்டது.

அனைத்து பரிசோதனை நடவடிக்கைகளிலும் டேவிட் பிரிஸ் விமான சேவைகள் சித்தி பெற்றுள்ளன. இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சேவைகளை ஆரம்பிப்பதற்கான கட்டுமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பூர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

டேவிட் பிரிஸ் விமான சேவைகள் நிறுவனம் தமது சேவைக்கான விண்ணப்பமாக விளங்குகின்றபோது நாங்கள் அதனை அனுமதிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

இதேவேளை எதிர்காலத்தில் பலாலி விமான நிலையத்தின் ஊடாக எந்தவொரு நாட்டுக்கும் இந்த விமான சபையின் ஊடகப் பயணித்து தாங்கள் விரும்பிய சேவையின் மூலம் பயணிப்பதற்கு இந்தச் சேவை வலியுறுத்தும்." - என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த டேவிட் ஃபீரிஸ் விமான சேவைகள் நிறுவனத்தின் விமானி, "இந்தச் சேவையை வாராந்தம் மூன்று நாள்கள் ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். இரு வழி கட்டணமாக 68 ஆயிரம் ரூபா அறவிடப்படும். ஏழு கிலோ கிராம் பயணிகள் பொதி அனுமதிக்கப்படும். பயண நேரமானது ஒரு வழிக்கு 1 மணித்தியாலம் 10 நிமிடங்கள் தேவைப்படும்." - என்றார்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீர் விநியோகம் தொடர்பாக இருவருக்கு இடையே நடைபெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதன் காரணமாக வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டுத் துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்த உள்நாட்டுத் துப்பாக்கியும் வவுணதீவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மதுபோதையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவரே தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புறக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் தமிழகத்துக்கு அகதியாகச் சென்றவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய வேளை யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் வைத்து கடந்த மே மாதம் 29 ஆம் திகதி குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

யாழ். ஏழாலையைச் சேர்ந்த 75 வயதுடைய சின்னையா சிவலோகநாதன் எனும் 75 வயது முதியவரே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் அவர் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், மேற்படி நபரை இன்று பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கிழக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் கவனயீர்ப்பு போராட்டம்!

கிழக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் இன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பக்க குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தின் போது,

பட்டம் முடித்து பல வருடங்களாகியும் இன்னும் வேலை வாய்ப்புகள் வழங்கப்படாமையினால் தாம் வேலையில்லாமல் காணப்படுவதாகவும், இது குடும்பத்திற்கு பெரும் சுமையாக இருப்பதாகவும் வேலையில்லா பட்டதாரிகள் தெரிவித்தனர்.

ஏனைய மாகாணங்களில் உள்ள பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவது போன்று கிழக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரிகள் புறக்கணிக்கப்படாமல் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் எனவும் கிழக்கு மாகாண பட்டதாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் கிழக்கு மாகாண பட்டதாரிகளின் சுழற்சி முறையிலான போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளருக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 2

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை பிரதான நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் துசித ஹல்லொலுவ, கடந்த மே மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுதங்களுடன் ஒருவர் சிக்கினார்

கம்பஹா, ஜூன் 2

கம்பஹா மாவட்டத்தில் பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொரண சந்தி பிரதேசத்தில் ஆயுதங்களுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பேலியகொடை, வெதமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து 3 வாள்கள், 10 கத்திகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச பேருந்து விபத்து தடைப்பட்ட போக்குவரத்து!

கொழும்பிலிருந்து மஸ்கெலியா நோக்கி பயணித்த அரச பேருந்து ஒன்று இன்று (02) காலை விபத்துக்குள்ளாகியுள்ளது. திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பேருந்து செங்குத்தான சரிவில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது பேருந்தில் சுமார் 20 பயணிகள் பயணித்துள்ளதாக நோட்டன்பிரிட்ஜ் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பேருந்து விபத்துக்குள்ளானதை தொடர்ந்து, வீதியில் கனரக வாகனங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.06.2025 வெளியிடப்பெற்றது.